**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 விடய முக்கியத்துவம்

வருமான வரி பெறுமதி சேர் வரி மற்றும் உழைக்கும்போது செலுத்தும் வரி ஆகியவற்றின் நீண்டகால நிலுவைகளான ரூபா 10.346 மில்லியன் இனை விபரிக்கின்ற உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு எழுப்பட்ட மதிப்பீடு சம்பந்தமான நிச்சயமற்ற தன்மையினை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 07 மற்றம் 27 இன்பால் தங்களது கவனத்தினை கோருகின்றேன் இதன் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியற்றதாகும்

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியினுடைய தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தொகுதியினுடைய நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிகூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாரள்களினுடைய பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச்

செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபன வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தால் முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த அண்ணளவாக ரூபா 10,654.46 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆயட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் எல்கேஎஸ் 16 இணங்க கணக்கிடப்படாமல் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. மேலும்,கணக்காய்வு பரிசோதனையின்போது வெளிப்பட்டதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் 22 நிலங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை இதன விளைவாக நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகை கணிசமாக குறைவடைந்திருந்தது. | குறிக்கப்பட்டது. ஆனால் முழுமையாக பெறுமாதேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் (பிபிஈ) பயனுள்ள வாழ்க்கையின் மீள்மதிப்பீடு கணக்கீட்டு சரிசெய்தலுடன் நடைமுறையில் பொருந்தாது. | இது நியமங்களை பின்பற்ற வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக்குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **துணைக்கம்பனியின் மீதிகள்** | - | |
| கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின்படி, துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் (CPSTL) இற்கு செலுத்த வேண்டிய தேறிய பெறுமதி ரூபா.7,669 மில்லியன் இதில் CPSTL இற்கு செலுத்தப்பட வேண்டிய மற்றும் பெறப்பட வேண்டிய தொகை முறையே ரூபா. 8,331 மில்லியன் மற்றும் ரூபா. 662 மில்லியனாகும். எவ்வாறாயினும், CPSTL இன் நிதிக்கூற்றின் படி, | இரு தரப்பினருக்கும் இடையில் ரூபா 433.99 மில்லியன் இணக்கம் செய்யப்படாத நிலுவைகளை இடையேயான நிலுவைகளின் இணக்கக்கூற்றில் தரப்பட்டுள்ளன. | இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் சரி செய்ய எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சரியான புள்ளி விவரங்கள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட வேண்டிய தேறிய தொகை ரூபா.8,204 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் பெறப்பட வேண்டிய தொகையை ஒப்பிட்டு முறையே ரூபா.8,608 மில்லியன் மற்றும் ரூபா.404 மில்லியனாக காணப்படுகின்றது. எனவே, வேறுபாடு ரூபா.535 மில்லியன் (பெறத்தக்க ரூபா.277 மில்லியன் மற்றும் செலுத்த வேண்டிய ரூபா. 258 மில்லியன்) இரண்டு கம்பனிகளின் துணைக்கம்பனிகளின் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) மண்ணெண்ணெய் மானியம்**

2015 நவம்பர் 24 ஆம் திகதியிட்ட FP/06/100/02/2016 இலக்க மற்றும் 04/12/2014 ஆம் திகதியிட்ட TTIP/1/83(1)T. இலக்க பொது திறைசேரியின் சுற்றறிக்கைக்கு இணங்க, அரசு மானியமாக, ஏதேனும் விலைக் குறைப்பினால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்வதற்கான ஒப்பந்தத்துடன், அரசு முடிவு செய்த விலையில், கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெய் விற்பனை செய்கின்றது. இருப்பினும், மீளாய்வாண்டிறுதியில் பெறப்பட வேண்டிய மொத்த தொகை ரூ.44,102.30 மில்லியன் இதில் ரூபா.5,097.72 மில்லியன் மட்டுமே கணக்கிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய மானியம் ரூபா. 39,004.58 மில்லியன் குறைவடைந்து காணப்பட்டது அதேவேளை வருமானம் ரூபா. 8,973.75 மில்லியனால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுகளில் ரூபா.33,030.83 மில்லியன் காணப்பட்டது. மேலும், அந்த வருமானத்தின் மீதான அனைத்து நேரடி மற்றும் மறைமுகவெரிகளும் கணக்கிடப்பட்டு செலுத்தப்படவில்லை.

அரசால் ரூபா.4,459 மில்லியன் கலால் வரிக்கு எதிராக பதிவழித்து மீள்நிரப்பபட்டது மற்றும் அதன்பின் திருப்பி செலுத்தப்படவில்லை. மேலும் அரசு (பொதுத் திறைசேரி) மண்ணெண்ணெய் மானியத்தை திருப்பிச் செலுத்துவதை உறுதிப்படுத்தவில்லை. அதன்படி, 2017 முதல் நிதிக்கூற்றில் மண்ணெண்ணெய் மானியத்தை CPC அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும், நிலுவைகளை மீட்பதற்கான தொடர்ச்சியான பின்தொடர்தல்கள் செயல்பாட்டில் உள்ளன. திறைசேரியால் செலுத்தபடும் உறுதிப்படுத்தல் அல்லது மானியம் பெறப்பட்டவுடன் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும்.

திரும்பப் பெறப்படாத அனைத்து மானியங்களையும் திரும்பப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதற்கேற்ப கணக்குவைக்கப்பட வேண்டும். வரிச்சட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளும் பொருந்தக்கூடியவை.

(இ) **மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (MUF)**

2013 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிய 38/1140 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி, 2014 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான எல்லா வணிக விற்பனையாளர் செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் (CODO)

2022 யூலை இலிருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணங்களின் கணக்கு மற்றும் சேகரிப்பு தொடர் நடவடிக்கை உட்பட ஆரம்பிக்கப்பட்டது. மேலும், முகாமைத்துவத்திடமிருந்து அனுமதி கிடைத்த பின்பு ஒன்றுதிரட்டப்பட்ட

சபையின் தீர்மானங்களை தாமதமின்றி அமுல்படுத்த வேண்டும். பொறுப்பான தரப்பினரிடமிருந்து வருமான இழப்பை வசூலிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| மற்றும் திறைசேரிக்குச் உரிமையான எல்லா விற்பனை செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்தும் (TODO) மாதாந்த பயன்பாட்டு கட்டணத்தை (MUF) அறவிடுவதற்கு சபையானது அனுமதி அளித்திருக்கிறது. எவ்வாறிருப்பினும், இத் தீர்மானமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதோடு மீளாண்வாண்டில் வருமான இழப்பு ரூபா 510.223 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டிறுதியில் திரட்டப்பட் வருமான இழப்பு ரூபா 3,557 மில்லியனாக இருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியில் ஆண்டுக்கான தேறிய வருமானம் மற்றும் நடப்பு சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டிறுதியில் ஒன்றுதிரட்டப்பட்ட பகிரப்படாத இலாபம் என்பன முறையே ஒரே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தன. 2022 யூலை 06 திகதியிடப்பட்ட தீர்மான இலக்கம் 27/1267 இன் பிரகாரம், 2022 யூலை 01 முதல் எம்யூஎப் சேகரிப்பு தொடங்கப்பட்டிருந்ததாக முகாமைத்துவ பணிப்பாளர் சபைக்கு தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், 2023 மார்ச் 10 வரை விற்பனை பிரதிநிதிகளிடமிருந்து ஒன்றுதிட்டப்பட்ட எம்யூஎப் சேகரிக்க கூட்டுத்தாபனத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2022 ஒக்டோபர் 31 இல் ஒன்றுதிரட்டப்பட்ட வருமான இழப்பு ரூபா 4,011 மில்லியனாக அதிகரிக்கப்பட்டிருந்துது. | எம்யூஎப் மீள்சேகரிக்க மற்றும் கணக்கிடப்படும். | |
| (ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றில் டீலர் தரகுகளினை குறைவாக மதிப்பிட்ட தவறினை சீர்செய்வதில் வருமான வரித்திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய வரிகள் கணக்குகளில் முழுமையாக சீர்செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கூட்டுத்தாபனத்தால் மதிப்பிடப்பட்ட அந்தந்த ஆண்டுகளுக்கான தொடர்புடைய வரிப்பொறுப்பு குறைவாக மதிப்பிடப்படும் அபாயம் ஏற்ப்பட்டது. மேலும் ஐஆர்டிக்கு அந்த திருத்தம் தொடர்பான திருத்தப்பட்ட வரி விபரத்திட்டு இன்னும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமை பரிந்துரை வழங்கப்படடிருக்கவில்லை. | குணக்குகளில் தொட்புடைய திருத்தங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் வருமான வரித்திணைக்களத்திற்கு வரிகள் வெலுத்த வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் வரிவிதிக்கத்தக்க வருமானம் கலால் வரியை சீர் செய்ததன் காரணமாக ரூபா 3,243 மில்லியனால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது அத்தொகை 2018 ஆண்டின் நிதிக்கூற்றில் ஐஆர்டிக்கு செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரியாக அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இவ் நிலுவைத்தொகை நீண்ட காலத்திற்கு தீர்க்கப்படாமல் கணக்கு புத்திகங்களில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமலிருந்தது. மேலும் திருத்தப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரி விபரத்திரட்டு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் மறை உரிமை மூலதன நிலை மற்றும் நட்ட உருவாகல் நிலை காரணமாக நிறைய பணப்பற்றாக்குறையையும், சிரமங்கயையும் எதிர்நோக்குகின்றது. எனவே வழங்கப்பட்ட ரூபா 2,627 மில்லியன் பெறுமதிக்கு தீர்வு காணப்பட்டிருக்கவில்லை மற்றும் வரி நிலுவை விடயங்கள் குறித்து காலத்திற்கு காலம் ஐஆர்டியுடான கூட்டங்கள் ஊடாக தொடர்புடைய பொறுப்புக்கள் ஐஆர்டிக்கு தெரிவிக்கப்பட்து. | திருத்தப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரி விபரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் ஐஆர்டியுடன் தீர்க்கப்படாத நிலுவைகள் முழுதாக தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| மீளாண்வாண்டில் மொத்த இலாபகூற்றின் படி விற்பனை தொகை 4,533 லீற்றரகளாகவும், ஈஆர்பி முறைப்படி 4,485 லீற்றர்களாவும் இருந்தது. இதன் பிரகாரம் சமப்படுத்தப்படாத நிலுவை 952 லீற்றர் அவதானிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக லங்கா பெற்றோல் (92 ஒக்டைன்), லங்கா ஓட்டோ டீசல் மற்றும் ஜிஎம்எஸில் ஜெட்ஏவன் விற்பனைத் தொகை முறையே 15,885 லீற்றர், 65,631 லீற்றர் மற்றும் 189,570 லீற்றர் அதிகமாக காட்டப்பட்டுள்ளது. மேலும், ஈஆர்பி முறைப்படி கூறப்பட்டுள்ள தெகையுடன் ஒப்பிடும்போது ஜிஎம்எஸில் நப்தா மற்றும் பெர்னஸ் ஒயில் விற்பனைத்தொகை முறையே 453 லீற்றர் மற்றும் 463 லீற்றர் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | மொத்த இலாபகூற்று மற்றும் ஈஆர்பி முறைகளுக்கிடையிலான வித்தியாசத்திற்கான காரணங்கள் சுருக்கப்பட்டன மற்றும் வித்தியாசத்திற்கு 16 காரணங்கள் இருந்தன. | இணக்கப்படாத விற்பனைத் தொகை முழுதாக தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 துணைக்கம்பனியின் நிதிகூற்று மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

மீளாய்வு வருடத்திற்கான துணைக் கம்பனிகளின் CPSTL இன் நிதிக்கூற்றுக்கள், மீதான முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தில் பின்வரும் விடயங்கள் காரணமாக கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் தொடர்புபட்ட நிலுவைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றுடன் ஓர் இணக்கமின்மையை ஏற்படுத்தும். மேலும், 2003 ஆம் ஆண்டிலிருந்து கம்பனி தனது சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதற்கான பொருத்தமாக கொள்கையை ஸ்தாபித்திராத நிலையில், விடயத்தின் முக்கியத்துவம் வழங்கப்பட்டுளள்து அதன் உண்மையான மதிப்பை கொண்டுவர நிலையான சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 10.5 தொடர்புடைய விடயத்தின் முக்கியத்துவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது மற்றும் இதன் பிரகாம் 22,902 வகையான ரூபா 7,875.25 மில்லியன் பெறுமதியான முழுமையாக தேய்மானம் அடைந்த பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யாமல் மற்றும் ஆயட்காலம் மதிப்பீடு செய்யாமல் கம்பனி தொடர்ந்து பயன்படுத்தியது. ரூபா 897 மில்லியன் வருமான வரி, பெறுமதி கூட்டப்பட்ட வரி மற்றும் உழைக்கும் போதான செலுத்துதல் வரி என்பனவற்றின் நீண்டகால மொத்த நிலுவைகள் தொடர்பாக

வருமான வரித்திணைக்களத்தால் கம்பனிக்கு எழுப்பப்பட்ட மதிப்பீட்டை நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 20.1(ஆ) விபரிக்கின்றது.

### (அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ரூபா 142.5 மில்லியனில் நிறைவேற்றப்பட்ட நிர்மான வேலைகள் ஆதன பொறி மற்றும் உபகரண கணக்கிற்கு மாற்றப்படாமல் குறைவேலையில் காட்டப்படடிருந்தன. மேலும், மேற்க்குறிப்பிட்ட சொத்திற்கு எல்கேஎஸ் 16 இன் பிரகாரம் பெறுமானத்தேய்வு ஏற்பாடு வழங்கப்படடிருக்கவில்லை. | பொறியியளாலரால்உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்ததாரரினுடைய இறுதி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு குறைவேலையில் உள்ளடக்கப்பட்ட மொத்த செலவும், இறுதிப்பிடிபணமும் பிரதான சொத்திற்கு பரிமாற்றப்படும் | கம்பனி நியமத்தின் தேவைக்கு இணங்க வேண்டும் |
| (ii) 2021 ஆம் ஆண்டில் கம்பனிக்கு உரித்தில்லாத ரூபா 10.2 மில்லியன் பெறுமதியான எரிசக்தி அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்புக்கான தொகையை கொண்டிருந்ததுடன் அத் தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் குறைவேலையில் பதியப்பட்டிருந்தது. | எரிசக்தி அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்புக்காக எரிசக்தி அமைச்சின் செயலாளர் வருட காலப்பகுதியில் ரூபா. 12,984,317 தொகையை மீள்செலுத்தியுள்ளார், புனரமைப்புக்கான மொத்த செலவு எரிசக்தி அமைச்சினால் மீள்செலுத்தப்பட்டவுடன் குறைவேலைக்கணக்கு தானகவே சீராக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கம்பனி தொடர்பான செலவுகள் வெளிப்படுத்தப்படவேண்டும் |

### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கும் மேற்ப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய மதிப்பிலான வங்கி நிலுவைகளை ரூபாயாக மாற்றியது தொடர்பாக உருவான ரூபா. 92.134 மில்லியன் பரிமாற்றல் வருமானம் முழுதாக மீளாய்வாண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அவ் பரிமாற்றல் வருமானத்தில் ரூபா 19.898 மில்லியன், ரூபா. 20.290 மில்லியன் மற்றும் ரூபா. 51.946 மில்லியன் முறையே 2021, 2020 மற்றும் 2020 ற்கு முற்பட்ட ஆண்டுகளுடன் தொடர்புபட்டவை. இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டிறுதியில் காசும் காசுக்கு சமமானவை மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான பரிமாற்றல் வருமானம் முறையே ரூபா. 72.235 மில்லியனால், ரூபா. 20.29 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. மேலும் | முகாமையினால் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி நியமத்தின் தேவைக்கு இணங்க வேண்டும் |

மீளாய்வாண்டிறுதியில் பரிமாற்றல் வருமானம் முறையே ரூபா. 72.235 மில்லியனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பெறவேண்டியவைகள்**<br>(i) மீளாய்வாண்டிறுதியில் ரூபா. 11,246.6 மில்லியன் பெறுமதியான வியாபா மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் (தெடர்புடைய தரப்பினர் ட்பட) இருந்தன, மேலும் இதில் ரூபா. 7.6 மில்லியன் 05 வருடத்திற்கு மேற்ப்பட்ட பெறவேண்டியவைகளாக காணப்பட்டிருந்தன.<br>அறவீட்டுக்கொள்ளப்படாத நிலுவைகள் தொடர்பாக குறித்த உறுதிப்படுதல்கள் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இந்த நிலுவைகளில் பெரும் பாலனவை 2010 ஆம் ஆண்டில் சப் ஈஆர்பி செயல்ப்படுத்துவதற்கு முன்பிருந்தே கொண்டுசெல்லப்படுகின்றன. இயக்குனர் சபையின் முன் அனுமதியுடன் இவ் நீண்டகால நிலுவைகளை பதிவழிப்பு செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பரிந்துரைசெய்தது. | நீண்ட கால நிலுவையிலுள்ள பெறுவனவுகளை மீளப்பெறுவதற்கு அல்லது தீர்வு நடவடிக்கைகளை பெற பொருத்தமான நடவடிக்கை மேற்க்கொள்ள வேணடும். |
| (ii) மீளாய்வாண்டிறுதியில் ரூபா 2.6 மில்லியன் பெறுமதியான 07 ஏனைய பெறவேண்டியவைகள் இருந்தன. எவ்வாறாயினும் கம்பனி அவ் வழங்குனர்களின் கடன் நிலுவைகளை தீர்க்காமல் அடுத்தடுத்து கொடுக்கல்வாங்கள்களை மேற்க்கொண்டது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் கேள்விக்குறியாக இருந்தது. | இந்த நிலுவைத்தொகைகளை மீளப்பெற அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ் நிலுவைகளை மீளப்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் மிக தொலைவில் உள்ளன. இயக்குனர் சபையின் முன் அனுமதியுடன் இவ் நீண்டகால நிலுவைகளை பதிவழிப்பு செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பரிந்துரைசெய்தது. | அனைத்து நிலுவையிலுள்ள பெறுவனவுகளை மீளப்பெறுவதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்க்கொள்ள வேணடும். |
| **செலுத்த வேண்டிய கணக்குகள்**<br>(iii) மீளாய்வாண்டின் இறுதியில் 13 செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 0.8 மில்லியன் நிலுவையாக 01 வருடம் தொடக்கம் 05 வருடங்களாக காணப்படுகின்றன மற்றும் 25 செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 1.5 மில்லியன் நிலுவைகள் 05 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுகின்றது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் சரியாக கண்டறியப்படவில்லை | குறித்த வழங்குனர்களின் பொறுப்புக்கள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளனவாக இருந்தன, கடன்கொடுத்தோர்கள் பணம் செலுத்த கோரவில்லை. | நீண்டகால நிலுவையிலுள்ள மீதிகள் தெடர்பாக பொருத்தமான நடவடிக்கை மேற்க்கொள்ள வேணடும். |
| (iv) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 6 மில்லின் தொகையானது 20 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளின் வரவு நிலுவையாக காணப்படுகின்றது. இதில் 10 வரவு | தீர்வு செய்யப்படாத மீதிகள் SAP (MIRO) இனால் சரிபார்ப்பதற்கு தவறான விலைப்பட்டியல்களை மாற்றியமையின் காரணமாக பெரும்பாலான வரவு மீதிகள் | அனைத்து இணக்க நிலுவைகளையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலுவையின் மொத்தத நிலுவை ரூபா. 4 மில்லின் ஆனது 05 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்வையாகாத நிலுவைகளாக காணப்படுகின்றுத மற்றும் ஏனைய 10 வரவு மீதிகளின் மொத்த நிலுவை ரூபா. 2 மில்லயனானது 1 தொடக்கம் 05 வருடங்களாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனையாளர் கணக்குகளில் பிரதிபலிக்கப்படுகின்றன. | |

**(ஈ) தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) கம்பனியின் பதிவுகளின் படி, CPC இலிருந்து பெற வேண்டிய தொகையிலிருந்து மற்றும் CPC இற்கு செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூபா. 8,608 மில்லியன் மற்றும் ரூபா. 404 மில்லியன்களாகும். இருப்பினும், CPC ஆல் பராமரிக்கப்படும் பதிவேடுகளின்படி, கம்பனியிலிருந்து பெறப்பட வேண்டியதுடன் மற்றும் கம்பனியால் கொடுக்கப்பட வேண்டியதுடன் தொடர்புடைய தொகைகள் முறையே ரூபா.8,331 மில்லியன் மற்றும் ரூபா.662 மில்லியன்களாக காணப்படுகின்றது. அதன்படி, தேறிய வேறுபாடு ரூபா. 535 மில்லியன், இதில் துணைக் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை மற்றும் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூபா. 227 மில்லியன் மற்றும் ரூபா. 258 மில்லியன்கள் இரண்டு கம்பனிகளுக்கும் இடையே அவதானிக்கப்பட்டன. | வித்தியாசத்திற்கான காரணங்கள் பின்வருமாறு<br>1. ரூபா. 53,548,548 - சிபிசியால் சப் பராமரிப்புக் மட்டணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>2. ரூபா. 203,088,745 - சிபிசியால் 2021 பதிவழிப்பு நிலுவை போக்குவரத்துக்கட்டணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>3. ரூபா. 194,529,679 – சிபிசியின் புத்தகங்களில் துருஅவுட் மற்றும் போக்குவரத்துக்கட்டணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>4. ரூபா. 44,906,835 – சிபிஎஸ்டிஎல்லால் கணக்கிடப்பட்டவை ஆனால் சிபிசியால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>5. ரூபா. 4,737,293 - சிபிஎஸ்டிஎல்லால் ஏனையவை பட்டியல்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>6. ரூபா. 339,355,980 - சிபிசியால் கணக்கிடப்பட்டவை ஆனால் சிபிஎஸ்டிஎல்லால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சர்சைக்குரிய அனைத்து நிலுவைகளை தீர்கவும் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் பொருத்தமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) கம்பனிப் பதிவேடுகளின்படி, LIOC இலிருந்து பெறப்பட்ட தொகை ரூபா.710 மில்லியன், மற்றும் LIOC இலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் படி கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா.715 மில்லியன். அதற்கமைய, இரண்டு நிறுவனங்களுக்கிடையே துணைக் கம்பனியின் நிலுவையாக ரூபா. 5 மில்லியன் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணங்கள் பின்வருமாறு<br>1. ரூபா. 1,183,454 – எல்ஜஓசி புத்தகத்தில் துறைமுக செயற்பட்டு கட்டணம் மற்றும் ஆய்வக கட்டணம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>2. ரூபா. 273,996 - எல்ஜஓசியால் போக்குவரத்துக்கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.<br>3. ரூபா. 9,131,909 - எல்ஜஓசியால் துர்றாபுட் வருமான வித்தியாசம் செலுத்தப்படவில்லை. | சர்சைக்குரிய அனைத்து நிலுவைகளை தீர்கவும் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் பொருத்தமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 4. ரூபா 2,495,897 - சிபிஎஸ்டிஎல் புத்தகத்தில் சர்சைக்குரிய பட்டியல் கணக்கிடப்படவில்லை. | |

**(உ) முன்னைய வருட தவறுகளின் திருத்தம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிறுதியில் நிதிக்கூற்றுகள் குறிப்பு இலக்கம் 22.1 குறிப்பிடப்பட்ட படி 2019, 2020 மற்றும் 2021 சிபிசியிடமிருந்து போக்குவரத்துக் கட்டணங்கள் மீளப்பெறுவதற்கு மேல் முறையே ரூபா.77.8 மில்லியன், ரூபா. 125.3 மில்லியன் மற்றும் ரூபா. 157.264 மில்லியன் பின்நோக்கி சீர்செய்யபடடிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய வருடத்தில் அதிகமான கட்டணம் வசூலிக்கப்பட்ட போக்குவரத்து கட்டணத்தை மறுசீரமைப்பதற்கு பதிலாக அது செயற்பாட்டு செலவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே ரூபா. 125 மில்லியன் மற்றும் ரூபா. 157 மில்லியனால் கம்பனியினுடைய வருமானம் மற்றும் மொத்த இலாபம் மற்றும் ஏனைய செலவுகள் கூட்டி காட்டப்பட்டிருந்தது. மேலும், 2020 ஜனவரி 01 இல் ரூபா. 57 மில்லியன் பகிரப்படாத இலாபத்தின் ஒன்றிணைந்த விளைவு சீர் செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் 2019 ஆண்டுக்கான வரிச்சேமிப்பு ரூபா 2 மில்லியனால் தவறாக கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | முகாமையினால் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி எல்கேஸ் 08 நியமத்தின் தேவைக்கு இணங்க வேண்டும். |

**1.6.5 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான இறுதியில் ரூபா 82,225.78 மில்லியன் வரிக்கு பின்னரான நட்டம் மற்றும் மீளாய்வாண்டிறுதியில் ரூபா 357,536.67 மில்லியன் எதிர்மறை நிகர சொத்து நிலையைக் கொண்டிருந்தது. கடந்த காலங்களில் குறுங்கால கடன்களின் அதிகரிப்பு மற்றும் நிதிச்லெவுகளின் தொடர்சியான அதிகரிப்பு, செலாவணி விகித ஏற்றஇறக்கங்களில் ஏற்ப்பட்ட எதிர்மறை | முக்கிய பெற்றோலிய பொருட்களின் விலைகள் மொத்தக் கிரயத்திலும் பார்க்க குறைவாக அரசாங்கத்தினால் தீர்மானிப்பதால் சிபிசி வரலாற்று ரீதியாக இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. சிபிசி எதிர் மறையான தேறிய சொத்துடன் செயற்பட்டாலும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான | முகாமை கூட்டுத்தாபனத்தினுடைய நிதிநிலைமையின் உறுதிப்பாடு தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும். |

விளைவு, விற்பனைத்தரகுகளின் அதிகரிப்பு, பொருத்தமற்ற விலையிடல் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் கடந்த இடர் குறைப்பு கொடுக்கல்வாங்கல்களின் நீண்டகால எதிர்மறை விளைவு ஆகியன கூட்டுத்தாபனத்திற்கு பெரு நட்டத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்து நிலை மேலும் சரிந்தது. இவ்வாறு அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாமல் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்தியங்கும் தன்மையை கொண்டு நடத்துகின்ற இயலுமை சந்தேகத்திற்குரியது ஆகும்.

நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிப்பதால், சிபிசி தொடர்ந்தியங்கும் அடிப்படையில் அதன் செயற்ப்பாட்டை தொடர்கிறது.

### 1.6.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) பதிவழிக்கப்பட்ட பெற வேண்டிய நிலுவைகள்** | | |
| (i) 2021 யூலை 22 ஆம் திகதிய 08/1252 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் ரூபா 1,516.039 மில்லியன் பெறவேண்டிய நிலுவைகள் போதிய தகவல்கள் இல்லாத காரணத்தினால் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி பெறத்தக்க நிலுவைகளை பதிவழிப்பதற்கான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு முன் சபையானது குறித்த நிலுவை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உடன் ஏதாவது மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு குறித்து பரிசீலிப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொண்டதா என கணக்காய்வில் உறுதிப்படுத்த இயலாதிருந்தது. அத்துடன் குறித்த நிலுவையுடன் தொடர்புடைய ஆவணங்களை பேணுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் கூட்டுத்தாபனமானது இணங்கியதா என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை | பதிவேடுகளில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட நிலுவை ஏற்பட்டிருந்தது. இந்த பதிவுகள் தொடர்பான ரேதுமான ஆவணங்கள், தரவுகள் மற்றும் தகவல்கள் SAP முறைமையில் காணப்படவில்லை. அத்துடன் Shipping தொழிற்பாட்டிலிருந்து கோரப்பட்டவை இந்த பெறவேண்டியவையினுடைய நிதியில் காணப்பட முடியாது. இதனால், சரியான சான்றுகள் இல்லாது ரூபா 1,189,647,149.02 ஆன பெறவேண்டிய நிலுவைகளினை கண்டறிதல் கடினமானது என இலங்கை சுங்கத்திணைக்களத்திடமிருந்து அறியத்தரப்பட்டிருந்தது. மேலும், இலங்கை சுங்கத்திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட VAT கொடுப்பனவை(ரூபா 326,394,420.00 ) அடையாளம் காண இயவாதுள்ளதாக அறியத்தரப்பட்டிருந்தது | சுற்றறிக்கையுடன் இணங்கி நடக்க வேண்டும் என்பதுடன் தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாட்டினை மேம்படுத்தும் அதேவேளை முறையான ஆவணங்கள் பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii)நிதிக்கூற்றுக்களில் அட்டுறு கொடுப்பனவுகளின் கீழ் நீண்டகாலமாக தொடர்ச்சியாக தீர்வு செய்யப்படாது "RF Dummy and HO Dummy" ஆகிய இரண்டு செயற்பாட்டிலில்லாத கணக்குகளில் காணப்பட்ட ரூபா 103.82 மில்லியன் ஆனது தீர்வு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாடு தொடர்பில் பரிசீலிக்காது மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள கணக்கீட்டு முறைமையில் ஆரம்ப நிலுவைகளை கொண்டிருந்த "RF Dummy and HO Dummy" இன் கீழ் பதிவழிக்கப்பட்ட கடன் நிலுவைகள் முன்னைய கணக்கீட்டு முறைமையிலிருந்து கொண்டு வரப்பட்ட மீதியாகும். குறித்த நிலுவைகள் தொடர்ரான மேலதிக தகவல்கள் அவை பதிவழிக்கப்படும் வரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. குறித்த நிலுவைகள் 2010.04.01 இலிருந்து காணப்படுவதனாலும் எந்தவித கோரிக்கைகளும் இது தொடர்பில் கிடைக்கப்பெறாமையினாலும் சரியான கணக்கு தொகுதியினை பேணும் பொருட்டு கணக்குப் பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பது நியாயமானதாகும். | பதிவழிப்பதற்கு முன் இனங்காணப்படாத நிலுவைகளை அடையாளம் காண உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) காசும் காசுக்கு சமமானவையும்** | | |
| 2017 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியில் 22 நாளேட்டுப்பதிவுகளினூடாக ரூபா 186.249 மில்லியன் கொடுப்பனவு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொள்ளப்பட்டதாக கணக்குப்புத்தகங்களில் பதியப்பட்டிருந்தது. ஆயினும், உண்மையில் அவ்வாறான கொடுப்பனவுகள் எவையும் சுங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் எந்தவித காசோலையும் இது தொடர்பான வழங்கப்பட்டிருக்கவில்லை. குறித்த கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டதற்கான காரணத்தினை விளக்க கூட்டுத்தாபனத்தின் முகாமையால் இயலாதிருந்தது. எவாறெனினும், தவறான கணக்கீட்டு நடைமுறைகளினூடாக மோசடியான முறைகேடுகளின் அபாயத்தினை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது. ஆத்துடன் இது நிதிக்மூற்றுக்களின் நியாயமற்ற சமர்ப்பித்தலுக்கும் காரணமாகலாம். இதன் விளைவாக வங்கி மீதிகள் மற்றும் தொடர்புடைய செலுத்த வேண்டிய நிலுவைகள் ஒரே பெறுமதியால் குறைத்து காட்டப்படலாம். | அந்தந்த ஆண்டுகளில் காசோலை இரத்துச் செய்யப்பட்டாலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பின்னரே மாற்றியமைக்கபட்டிருந்தன. | கூட்டுத்தாபனத்தினால் முறையான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் |

### 1.6.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபாரக் கடன்படுநர்களின் வயதுப்பகுப்பாய்வின்படி ரூபா 2,308.285 மில்லியன் ஆன 78 வரவு நிலுவைகள் மற்றும் ரூபா 7.706 மில்லியன் பெறுமதியான 20 செலவு மீதிகள் 5 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் / தீர்வு செய்யப்படாமல் தொடர்ந்து காணப்படுகின்றது. ஆயினும், நிலுவைத் தொகைகள் தீர்க்கப்படாமலே குறித்த கடன்படுநர்களுடன் தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கிணங்க, குறித்த நிலுவைகளின் துல்லியம் மற்றும் உளதாம் தன்மை தொடர்பில் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | பின்வரும் காரணங்களினால் குறித்த வேறுபாடுகள் எழுந்தன.<br>• உரிய கடன்படுநரினால் சில பற்றுச்சீட்டுக்கள் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>• சிபிசி இனால் தாமதத்திற்கான வட்டி விதிக்கப்பட்டமை.<br>• விலை மீளாய்வினால் எழுந்த சில முரண்பாடுகள்.<br>• குறுகிய விநியோகத்தினால் எழுந்த சில முரண்பாடுகள்.<br>• சில கடன்படுநரினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் சிபிசி இனால் கணக்கிற்கெடுத்துக் கொள்ளப்படவில்லை.<br><br>வருட இறுதியில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு தொடர்பாக அறிந்திருக்காத கடன்படுநர் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் தீர்வு செய்ய்யப்படும். | எல்லா நீண்டகால பெற வேண்டிய நிலுவைகள் தொடர்பாகவும், அறவிடுவதற்கு அல்லது பரிகார நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேலாக ரூபா. 137.548 மில்லியன் பெறுமதியான 16 வரவு மீதிகளும் 1 முதல் 5 வருடங்கள் வரையிலான ரூபா. 1,164.044 மில்லியன் பெறுமதியான 18 வரவு மீதிகளும் தீரக்கப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாது காணப்பட்டன. மேலும், நிலுவைகளைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்காமல் விற்பனையாளர்களுடன் கூட்டுத்தாபனமானது பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | ரூபா 137.5 மில்லியன் பெறுமதியான 16 வரவு நிலுவைகள், சட்ட வழக்கினை எதிர்கொண்டுள்ள PV ஒயில் இடமிருந்து பெறவேண்டிய ரூபா 130.9 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. | அனைத்து நீண்டகால நிலுவை மீதிகளினையும் தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் வயதுப்பகுப்பாய்வின்படி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 40,081 மில்லியன் பெறுமதியான 41 விற்பனையாளர்களின் மீதிகள் 5 வருடங்களுக்கு மேலாகத் தீர்க்கப்படாமல் இருந்தன மற்றும் ரூபா.11,765.714 மில்லியன் பெறுமதியான 103 செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரை தீர்க்கப்படாமல் இருந்தன. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | ரூபா 40,081 மில்லியன் ஆன 41 விற்னையாளர்களில் 2 விற்பனையாளர்கள் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திற்கானவர்களாகும். தேசிய ஈரானிற்கான நிலுவைத்தொகையை தீர்ப்பதற்கான செயன்முறை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. | அனைத்து நீண்டகால நிலுவை மீதிகளினையும் தீர்ப்பதற்கும் முறையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்களினை பேணுவதற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** மீளாய்வாண்டில் விநியோகஸ்தர்களினால் கோரப்பட்ட நட்டஈட்டுத்தொகையானது ரூபா 67 மில்லியனிலிருந்து ரூபா 400 மில்லியன் ஆக அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 5 மடங்கிலும் அதிகமாக அதிகரித்திருந்தது. ஆயினும் கூட்டுத்தாகனத்தினால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான நட்டஈட்டுத்தொகையானது மீளாய்வாண்டிலன் நிதிக்கூற்றுக்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தினால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான கடன் நிலுவைகள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (ஆ) (i) 7.2 ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வியாபாரம், நிலக்கரி வியாபாரம், கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் விவசாய இரசாயன வியாபாரம் போன்ற பாரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய | செயற்பாட்டுக் கைநூல் தயார் நிலையிலுள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்பாட்டுக் கைநூலை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை. | | |
| (ii) | 9.3 ஆம் வழிகாட்டல் | பொருத்தமான அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்கள் இறுதிக்கட்டத்தில் உள்ளது மற்றும் அண்மைக்கால சூழ்நிலையால் வினைத்திறனாக செயற்படுத்த முடியவில்லை. இது தொடர்பில் பகுதித் தலைவருடன் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன் முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | மேற் குறிப்பிட்டவாறு |
| (iii) | 9.12 ஆம் வழிகாட்டல் | பொதுத் திறைசேரி, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட நலன்புரி திட்டங்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. எவ்வாறானினும் மீளாய்வாண்டிறுதியில் ரூபா. 26.06 மில்லியன் பெறுமதியான ஊழியர்களின் நலன்புரி செலவுகள் கூட்டுத்தாபனத்தால் மேற்க்கொள்ளப்பட்டிருந்தது | வருடத்திற்கான பாதீட்டின்படி, கூட்டுத்தாபனத்தின் நலன்புரி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு தொழிற்பாட்டிற்கு தேவையான பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு ஒவ்வோர் ஆண்டும் இயக்குனர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு,இயக்குனர் சபையின் அங்கீகாரம் படி நடைபெறும். | மேற் குறிப்பிட்டவாறு |
| (இ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை. | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மூன்று “A” தர பதவிகளை உள்ளடக்கிய பதவி வெற்றிடங்களின் கடமைகளை மேற்கொளவ்தற்காக 03 மாதங்களுக்கு மேலாக 12 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். | கடந்த காலங்களில் கூட்டுத்தாபனத்தின் மனிதவளக்கூற்றின் படி 1052 வெற்றிடங்கள் இருந்தன. சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் 12 உத்தியோகத்தர்கள் வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | மேற் குறிப்பிட்டவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | நிதி ஒழுங்கு விதி 396 | தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் காசோலைகளானவை பழையதாகக் கருதப்படுவதோடு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலை மாற்றுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், 09 காசோலைகள் அச்சிடப்பட்டன. ஆனால், ரூபா 1.642 மில்லியன் பெறுமதியான காசோலைகள் மீளளிக்கப்படாது இருந்தன. | பெரும்பாலான காசோலைகள் தற்போது மாற்றப்பட்டுவிட்டன மற்றும் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு வழங்கப்படாத காசோலைகள் செல்லுபடியாகாது | இது தொடர்புடைய நிதி ஒழுங்கு விதியுடன் இணங்கவேண்டும் |
| (உ) | 2021 டிசம்பர் 30 ஆந் திகதிய ரிஜபி/ரிபி/09/06-02/21 ஆம் இலக்க பொது திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கைகள் | சுங்க சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிறுதியில் 2020 மற்றும் 2021 காலப்பகுதிகளுடன் தொடர்புபட்ட ரூபா. 11,015.43 மில்லியன் செலுத்தப்படவேண்டிய சுங்கத்தீர்வை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு இறக்குமதிக்கான 151 கஸ்டெக்கள், மிகுதியாகவுள்ள வரிகள் தீர்ப்பதற்காக, இற்றைப்படுத்துவதற்காக சுங்கத்திடம் சமர்ப்பிகப்பட்டிருந்தது. 96 கஸ்டெக்களில் 13 கஸ்டெக்கள் தீர்க்கப்பட்டுவிட்டன மற்றும் இலங்கை சுங்க ஆவணப்படுத்தல் செயன்முறை பூரணப்படுத்தப்பட்டுவிட்டது. | கூட்டுத்தாபனம் நிலுவையிலுள்ள மீதிகளை முழுவதுமாக தீர்ப்பதுடன் பொது திறைசேரியின் வழிகாட்டல்களுக்கும் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 80,564.78 மில்லியன் தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,248.09 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 84,812.87 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணய மாற்று வீத செலவுகள், நிதிச்செலவுகள், மற்றும் நிர்வாகச்செலவுகள் முறையே ரூபா. 11,379.3 மில்லியன், ரூபா. 4731.6 மில்லியன், 1224.4 மில்லியன்களால் அதிகரிப்பு ஏற்ப்பட்டிருந்தமையே வீழ்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | கூட்டுத்தாபனம் | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| மொத்த இலாப / நட்ட விகிதம் (%) | (0.70) | 12.95 | (2.01) | 11.62 |
| செயற்பாட்டு இலாப / நட்ட விகிதம் (%) | (7.14) | 6.49 | (6.88) | 6.79 |
| தேறிய இலாப / நட்ட விகிதம் (%) | (14.06) | 0.45 | (13.87) | 0.78 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.47 | 0.45 | 0.49 | 0.47 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.42 | 0.37 | 0.43 | 0.38 |
| **முதலீட்டு விகிதங்கள்** | | | | |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓசிஇ) (%) | (16.26) | (8.74) | (17.11) | (10.47) |
| இணைப்பு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.44 | 1.44 | 1.55 | 1.56 |

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப / நட்ட விகிதம் , செயற்பாட்டு இலாப விகிதம் மற்றும் தேறி இலாப / நட்ட விகிதம் முறையே 105 சதவீதத்தால், 210 சதவீதத்தால் மற்றும் 3,218 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மீதான திரும்பல் வீதம் 286 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களால் சிப் டு பார்டி செயற்பாடுகள்**<br>கூட்டுத்தாபனத்தினால் பெற்றோலிய பொருட்கள் இறுதி வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவோ அல்லது பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலமாகவோ விநியோகிக்கப்படுகின்றன. பெற்றோலிய பொருட்களை விநியோகஸ்தர்கள் மூலம் விற்பனைத்தரகு செலுத்தவேண்டும், நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்தால் விற்பனைத்தரகு செலுத்தவேண்டியதில்லை. இதற்கு மேலதிகமாக சிப் டு பார்டி என அழைக்கப்படும் தனியார் நுகர்வோருக்கு நேரடியாக எரிபொருளை விநியோகிக்க சில தெரிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு 2008 முதல் விற்பனைத்தரகு செலுத்தும் அதிகாரத்தை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டிறுதியில் சிப் டு பார்டி முறைமையின் கீழ் 05 விநியோகஸ்தர்களுக்கு ரூபா 132.453 மில்லியன் தரகு செலுத்தப்பட்டிருந்தது.<br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன. | | சீபிசீ தாமதமின்றி ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும் |
| (i) எஸ்பிஎஸ் இன் கீழ் தனியார் நுகர்வோருக்கு நேரடியாக எரிபொருளை விநியோகிக்க விநியோகஸ்தர்களால் கையாளும் செலவு அல்லது செயற்பாட்டுச் செலவு அல்லது மேந்தலைச் செலவு எதுவும் ஏற்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு சோதனையில் வெளிப்பட்டிருந்தது. எனவே, கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக செலவுடன் எஸ்பிஎஸ் முறையை அமுல்படுத்துவதற்கான காரணம் கணக்காய்வில் தெளிவாக இல்லை. | சிப் டு பார்டி நடவடிக்கைகளுக்கு தொடர்பான ஏனைய செலவு கூறு உள்ளது. ரேமினல்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு செல்லும் போக்குவரத்து செலவு, அந்தந்த சிப் டு பார்டி செயற்பாட்டாளருக்கு (டீலர்) செலுத்தப்படும். | விநியோகஸ்தரகள் செலுத்தும் போக்குவரத்து செலவு குறிப்பிடும்படியாக இல்லை. கூட்டுத்தாபனத்தின் செலவை இழிவுபடுத்த முகாமையால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) அனைத்து தனியார் நுகர்வோருக்கும் எரிபொருளை விநியோகிக்க, சிபிஎஸ்டிஎல் இன் பவுசர் மற்றும் வாடகை பவுசர்களின் எண்ணிக்கையில் போதுமான எண்ணிக்கையிலான பவுசர்கள் இருந்தன. எனவே, எஸ்பிஎஸ் வாடிக்கையாளராக பதிவு செய்துள்ள, தனியாருக்கு நுகர்வோராக பதிவு செய்ய, எந்த தடையும் இல்லை, | சிபிஎஸ்டிஎல் இல் பவுசர்களுக்கு தட்டுப்பாடு உள்ளது. குறிப்பாக பவர் டேக் ஆப் (பிரிஓ) குழாய்கள் மற்றும் வெளியேற்றம் செய்வதற்கான நீண்ட குழாய்கள் பொருத்தப்பட்ட பவுசர்கள், சிபிஎஸ்டிஎல் இல் சுமார் 90 பவுசர்கள் உள்ளன, மேலும் அவர்கள் 500 க்கும் மேற்பட்ட | மேற் குறிப்பிட்டவாறு |

அப்படி இருந்தால், கூட்டுத்தாபனத்திற்கு, விநியோகஸ்த்தர் தரகு தொகையை, அதிகளவில் சேமிக்க முடியும். எனவே, கூட்டுத்தாபனத்தினால் இவ்வளவு நீண்ட காலத்திற்கு எஸ்பிஎஸ் செயல்முறையை செயல்படுத்துவதும் பராமரிப்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

பவுசர்களையும் வாடகைக்கு எடுத்துள்ளனர்.

**(ஆ) விநியோகஸ்தர்களுக்கு விற்பனைத்தரகு**

2019 யூலை 30 ஆம் திகதிய சபைத் தீர்மான இலக்கம் 05/1231 இன் பிரகாரம், கொள்கையளவில், சிபிஎஸ்டிஎல் விநியோகஸ்தரகளுக்கு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான தரகு வீதம் 3% மற்றும் கோடோ விநியோகஸ்தரகளுக்கு 2.75% மும் ஒரு நிரந்தரமற்ற அளவீடாக மேல் மற்றும் கீழ் வரம்புகளுக்கு கிடையில் பின்வரும் உற்பத்திகளுக்கு சபை அங்கீகாரம் அளித்திருந்தது

| விபரங்கள் ------------ | பேற்றோல் --------- | | டீசல் --------- | |
|---|---|---|---|---|
| | 92 ஒக்டைன் ---------- | 95 ஒக்டைன் ---------- | ஏல்ஏடி ------- | ஏல்எஜ்டி ------- |
| உச்ச எல்லை | ரூபா.162 | ரூபா.170 | ரூபா.121 | ரூபா.145 |
| கீழ் எல்லை | ரூபா.117 | ரூபா.128 | ரூபா.95. | ரூபா.110 |

மண்ணெண்னைக்கு 2 சதவீதம் நிலையான தரகு அளிக்கப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன.

(i) மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை 2019 ஆகஸ்ட் 15 முதல் நடைமுறைப்படுத்த கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தாலும், அது விநியோகஸ்தர்களுக்கு 2022 மார்ச் 10 அன்று தெரிவிக்கப்பட்டிருந்தது, அதாவது 31 மாதங்களுக்கும் மேலாக தாமதமானது. எவ்வாறாயினும், சபையினுடைய தீர்மானத்தை விநியோகஸ்தர்களுக்கு சரியான நேரத்தில் தெரிவிக்க வேண்டிய பொறுப்பை புறக்கணித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விநியோகஸ்தர் தொழிற்சங்க பிரதிநிதிக்கும் சிபிசியின் முகாமைக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையின் போது முறைசாரா முறையில் சயையின் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பே இத் தீர்மானத்தினுடைய தகவல் பரிமாற்றம் சிறப்பாக மேற்க்கொள்ளப்பட்டது. இது அதிகாரப்பூர்வமாக தலைவரால் வாய்மொழியாகத் தெரிவிக்கப்பட்டது மற்றும் டிஜிஎம் (எப்) க்கு வழங்கப்பட்ட குறிப்பு தகவல்தொடர்புகளை உறுதிப்படுத்துகிறது.

சபைத தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவும் மற்றும் உடனடியான தகவல் தொடர்பும் அவசியம்

(ii) எம்டியால் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை,

குறிக்கப்பட்டது.

இது தொடர்புடைய சபைத் தீர்மானத்துடன் இணங்க வேண்டும்.

அதற்குப் பதிலாக, அனைத்து விநியோகஸ்தர்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய பகுப்பாய்வை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரே சந்தைப்படுத்தல் பார்வையில் மேற்கொள்ளுமாறு சந்தைப்படுத்தல் முகாமையாளர் (எம்.எம்) அறிவுறுத்தப்பட்டார். அப்போது விநியோகஸ்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக செலுத்திய தொகை ரூபா 100 மில்லியன், க்கும் குறைவாகவே இருந்த போதும். நாளொன்றுக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு ரூ. 3 மில்லியன். எனவே, சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் எம்டி, தன் சொந்த விருப்பத்தின் பேரில், இதுபோன்ற நடவடிக்கை எடுத்திருப்பது, கணக்காய்வில் கேள்விக்குறியாக இருந்தது.

| | | |
|---|---|---|
| (iii) சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக பெட்ரோலியம் விநியோகஸ்தர்கள் சங்கமும் மற்றும் ஏனைய நான்கு விநியோகஸ்தர்களும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர், மேலும் தற்போதைய நிலையைப் பராமரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. 2022 யூலை 15 அன்று மேற்கண்ட தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ரத்து செய்தது. அதன்படி, ஈஆ்பி முறைமையில் (சப்) தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன, இதனால் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த எந்த சட்டத் தடைகளும் இல்லை என்பதால் 2022 யூலை 16 முதல் புதிய தரகு விகிதங்களை இற்றைப்படுத்த கூட்டுத்தாபனத்திற்கு முடியுமாக இருக்கின்றது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவலின்படி, கூட்டுத்தாபன்தால் 2022 யூலை 17 வரை மேலதிக கொடுப்பனவாக செலுத்திய விநியோகஸ்தர் தரகுத் தொகை ரூ. 4,349.93 மில்லியன் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மார்ச் 16 வரை மேலதிக கொடுப்பனவு விநியோகஸ்தர் தரகு கணக்கிடப்பட்டிருந்தது. மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகில் 1/5 பகுதி வசூலிக்கப்பட்டிருந்தது. | மேலதிக தரகு கொடுப்பனவு முழுமையாக வசூக்கப்பட வேண்டும். |

(iv) சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு எந்த சட்டத் தடையும் இல்லாத நிலையில் மற்றும் கூட்டுத்தாபனத்தினுடைய நிதி நெருக்கடியைப் பொருட்படுத்தாமல், சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தற்போதுள்ள மேல் மற்றும் கீழ் இடைவெளி அடிப்படையை 2022 யூலை 25 முதல்

| | | |
|---|---|---|
| அகற்றுமாறு தலைவர் நேரடியாக உத்தரவிட்டார். அதன்படி, விநியோகஸ்தர் தரகின் மேல் மற்றும் கீழ் எல்லைகள் குறித்த சயைபினட தீர்மானத்தை புறக்கணித்து, விநியோகஸ்தர் தரகு தொடர்ந்து செலுத்தப்பட்டிருந்தது.<br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன. | | |
| (அ) 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பெட்ரோலியச் சட்டத்தின் படி சபையின் தீர்மானத்தை திருத்துவதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களின் சம்மதம் மற்றும் வரிசை அமைச்சரின் எழுத்துப்பூர்வ அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | குறிக்கப்பட்டது. | சபைத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) விநியோகஸ்தர் தரகின் மேல் மற்றும் கீழ் எல்லை நீக்கப்பட்ட பின்பு, விநியோகஸ்தர் தரகாக விநியோகஸ்தர்களுக்கு மேலதிக கட்டணம் 2022 யூலை 26 முதல் ஆகஸ்ட் 31 வரை ரூபா. 1,963.87 மில்லியனும், அதன்படி, அன்றைய திகதியில் விநியோகஸ்தர் தரகின் மொத்த திரட்டப்பட்ட மேலதிக கொடுப்பனவாக ரூபா. 6,537.96 மில்லியன் வரை அதிகரிகப்பட்டிருந்தது. | குறிக்கப்பட்டது. | மேற் குறிப்பிட்டவாறு |
| (v) சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு விநியோகஸ்தர் தரகாக செலுத்த வேண்டிய ரூபா 30.7 மில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடும் போது, 2022 யூலை 26 அன்று விநியோகஸ்தர் தரகின் உண்மையான மேலதிக கொடுப்பனவு (கட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தின் கீழ் கூட) ரூபா. 67.9 மில்லியன் இருந்தது. அதன்படி, விநியோகஸ்தர் தரகு வீதத்தின் மேல் இடைவெளி அகற்றப்பட்டதால் விநியோகஸ்தர் தரகாக மதிப்பிடப்பட்ட விளைவு கீழே காட்டப்பட்டுள்ளது. | சந்தைப்படுத்தல் செயற்பாட்டினால் மதிப்பிடப்பட்டிருந்த எதிர்பார்க்கப்பட்ட எரிபொருள் வழங்களின் அடிப்படையில் குறிக்கப்பட்ட கணக்கீடு செய்யப்பட்டிருந்தது மற்றும் இது உண்மையான வழங்கலின் அடிப்படையில் வேறுபடலாம் | மேற் குறிப்பிட்டவாறு |

| விபரங்கள்<br>---------------- | நாளொன்றுக்கு<br>-------- | மாதமொன்றிற்கு<br>---------- | வருடமொன்றிற்கு<br>---------- |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன். | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **விநியோகஸ்தர்கள் தரகு :** | | | |
| நடைமுறையிலுள்ள சபையின் தீர்மானத்தின் கீழ் செலுத்தப்படுவது (இடைவெளியுடன்) | 30.7 | 921 | 11,052 |

| | | | |
|---|---|---|---|
| புதிய அறிவுறுத்தலின் கீழ் கொடுப்பனவுகள் (இடைவெளியில்லாமல்) | 98.6 | 2,958 | 35,496 |
| **வித்தியாசம் (அதிகரிப்பு)** | **67.9** | **2,037** | **24,444** |
| நடைமுறையிலுள்ள சபையின் தீர்மானத்தின் அதிகரிப்பு சதவீதமாக ((இடைவெளியுடன்) | **221** | **221** | **221** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன.

(அ) 2019 யூலை 30 திகதிய சபை தீர்மான இலக்கம் 05/1231 உடன் ஒப்பிடும்போது, நாளொன்றுக்கு விநியோகஸ்தர் தரகுகளின் கிரயம் 221 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருந்தது, அதன்படி, வருடத்திற்கு விநியோகஸ்தர் தரகுகளின் கிரயம் ரூபா. 24 பில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கலாம். இதன் பிரகாரம், 2022 ஆம் வருடத்திற்கான விநியோகஸ்தர் தரகுகளின் அதிகரிப்பு, அந்த ஆண்டிற்கான சுத்திகரிப்பு உத்தியோகத்தர்கள் உட்பட கூட்டுத்தாபன ஊழியர்களின் சராசரி செலவை விட நான்கு மடங்கு அதிகமாக இருக்கும்.

குறிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்டவாறு

(ஆ) கடந்த ஐந்து வருடங்களாக கூட்டுத்தாபனங்களால் செலுத்திய மசகு எண்ணெய், தார் , விவசாயப் பொருட்களுக்கான தரகுகள் மற்றும் ஏனைய அரசாங்க வாடிக்கையாளர்களுக்கான தரகுகள் உட்பட்ட மொத்த விநியோகஸ்தர் தரகுகளின் விபரங்கள், கீழே தரப்பட்டுள்ளது.

| **வருடம்**<br>------- | **ரூபா. மில்லியன்**<br>---------- |
|---|---|
| 2017 | 10,995 |
| 2018 | 13,541 |
| 2019 | 14,132 |
| 2020 | 12,402 |
| 2021 | 14,486 |
| **அடுத்த 12 மததங்களுக்கான எதிர்வு கூறப்பட்ட விநியோகஸ்தர் தரகுகள்** | **35,496** |

குறிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்டவாறு

அதன்படி, கடந்த ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடும் போது, அடுத்த 12 மாத காலத்திற்கு எதிர்வுகூறக்கூடிய மொத்த விநியோகஸ்தர் தரகு குறிப்பிடத்தக்கதாகவும் அசாதாரணமாகவும் இருக்கும். எனவே, நாட்டில் எரிபொருள் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பும் போது, மேல் எல்லையை கட்டுப்படுத்தாமல் எரிபொருளின் விற்பனை விலையின் அடிப்படையில் விநியோகஸ்தர் தரகு தீர்மானிக்கப்படுவதால், விநியோகஸ்தர் தரகு கிரயம் மேலும் அதிகரிக்கும். எனவே, விநியோகஸ்தர் தரகு எரிபொருள் விலையில் உள்ளடக்கப்பட்டு சேர்கப்படுவததன் காரணமாக எரிபொருளின் விற்பனை விலை மேலும் அதிகரிக்கும்.

**(vi) பெட்றோல் மற்றும் டீசல் விற்பனை விலையில் விநியோகஸ்தர் தரகின் தாக்கம்**

2022 மே 23 திகதிய அமைச்சரவை தீர்மானம் இலக்கம் 22/0673/522/002 இன் பிரகாரம் , கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலை பொறிமுறையானது பெட்ரோலிய உற்பத்திகளின் கிரயம் மற்றும் விற்பனை விலையை தீர்மானிக்க பயன்படுத்தப்பட்டது, அதன்படி, விநியோகஸ்தர் தரகு அதிகரிக்கப்பட்டது. எரிபொருள் கிரயம் மற்றும் விற்பனை விலையில் விநியோகஸ்தர் தரகின் தாக்கம் பின்வருமாறு.

| விபரங்கள் | பெற்றோல் --------- | | டீசல் --------- | |
|---|---|---|---|---|
| -------------- | 92 ஒக்ட் -------- | 95 ஒக்ட் -------- | லட் -------- | ஒக்ட் -------- |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| உள்ளூர் சந்தை விலை | 450 | 540 | 430 | 510 |
| மேல் இடைவெளி | 162 | 170 | 121 | 145 |
| விலை சுத்திரப்படி விநியோகஸ்த்தர் தரகு | 13.50 | 16.20 | 12.90 | 15.30 |
| சபைத்தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட உண்மையான விநியோகஸ்தர் தரகு | 4.86 | 5.10 | 3.63 | 4.35 |
| சபைத் தீர்மானத்திற்கு இணங்காத காரணத்தினால் எரிபொருளின் விலை அதிகரிகடகப்பட்டுள்ளது | 8.64 | 11.10 | 9.27 | 10.95 |

குறிக்கப்பட்டது.

சபைத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விநியோகஸ்தர் தரகின் மேல் எல்லை நீக்கப்பட்டதன் விளைவாக, எரிபொருளின் கிரயம் அண்ணளவாக ரூபா. 10 ஆல் லிட்டருக்கு அதிகரிக்கப்ட்டிருந்தது. இதன்படி, பெற்றோல் ஒக்டேன் 92 மற்றும் ஒக்டேன் 95 இன் விலை முறையே ரூபா. 8.64 மற்றும் ரூபா. 11.10 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. லுங்கா ஓட்டோ டீசல் மற்றும் லங்கா சுப்பர் டீசல் ஆகியவற்றின் விலை முறையே ரூபா. 9.27 மற்றும் ரூபா. 10.95 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது, இதன் விளைவாக பொது மக்கள் எரிபொருளுக்கான மேலதிக செலவை ஏற்க வேண்டியிருந்தது | | |
| (vii) இதன் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினுடைய தற்போதைய மற்றும் எதிர்கால நிதி நிலை குறித்த பொருத்தமான ஆய்வு மற்றும் மதிப்பீடு இல்லாத விநியோகஸ்தர் தரகின் அனுமதிக்கப்பட்ட மேல் மற்றும் கீழ் எல்லைகளை அகற்றுவதற்கான முடிவு, நீண்ட காலத்தில் கூட்டுத்தாபனத்தின் நிலைதிருக்கும் தன்மைக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். | குறிக்கப்பட்டது. | சபைத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட்டினால் (CPSTL) அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் முயற்சி மூலவளத்திட்டமிடல் முறைமை (ERP) தலையீட்டுடன் தொடர்புடைய தமது பொறுப்புக்கள் தொடரப்பாக ஏதேனும் ஓர் ஒப்பந்தம் அல்லது அமைப்பு அகவிதியை கூட்டுத்தாபனம், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடட் (CPSTL) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவை கொண்டிருக்கவில்லை என்பதோடு விசேடமாக இம் முறைமையானது எரிபொருள் களஞ்சிய மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகளுக்கு போதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வரைபு உடன்படிக்கையின் மீது ஏஜி கருத்து பெறப்பட்டிருந்தது மற்றும் எல்ஜஓசி மற்றும் சிபிஎஸ்டிஎல் இலிருந்து உறுதிப்படுத்தல் பெறவேண்டும். உறுதிப்படுத்தல் பெற்ற பின்பு அது சப் வழிகாட்டல் குழுவில் சமர்ப்பிக்கப்படும். | தொடர்புடைய அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் கூட்டுத்தாபனம் தாமதமின்றி ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) முன்னையாண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் மீண்டும் கூறப்பட்டபடி பின்வரும் அவதானிப்புக்களானவை பொதுப் பாவனையாளர் வசதிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |

| | | |
|---|---|---|
| (i) இலங்கை அரசாங்கம் (GOSL), கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தமானது (GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின் பதினைந்தாம் பிரிவின் விதிமுறைகளுக்கு ஏற்ப 2008 டிசம்பர் 31 ஆம் திகதி காலாவதியானது. நிறுவனங்களின் ஆளுகை செயல்முறை மற்றும் உற்பத்தி செலவினைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் விலையிடும் சூத்திரம் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துச் செலவுகள் (சிலப் (slab) என்பனவற்றை உள்ளடக்குகின்ற அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் உள்வ ாங்கப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகளானவை; தொடர்புடைய எல்லாத் தரப்பினரதும் ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2019 இல் CPC மற்றும் CPSTL க்கு இடையே செயற்பாட்டுக் கட்டணம் மற்றும் போக்குவரத்து செலவுகளை தீர்மானிக்க ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. முறையாக சூத்திரத்தை சமர்ப்பிக்க தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. குழுவின் பரிந்துதையின் படி, 2019 ஏப்ரலில் இறுதி மீள்பரிசீலணை மேற்க்கொள்ளப்பட்டிருந்தது. | மேற் குறிப்பிட்டவாறு |
| (ii) 2019 மே 13 ஆம் திகதி கூட்டுத்தாபனமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டுடன் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளுக்கும் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. ஆனாலும் 2003 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக இருக்கக்கூடிய லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இதே விடயத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் டீபாதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்தியன ் ஒயில் கம்பனி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மறுக்கின்ற பொழுது கூட்டுதத்பனமானது சாதகமற்ற நிலைமைகளின் ஏதேனும் தாக்கம் மற்றும் செலவுகளை ஏற்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | 2019 இல் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் CPC இற்கு் ம் CPSTL இற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டு CPSTL ஆல் CPC இற்கு் சேவைகள் வழங்கப்பட்டு உள்ளது. CPSTL மற்றும் LIOC இற்கும் இடையே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட முடியாது. | மேற் குறிப்பிட்டவாறு |

| | | |
|---|---|---|
| (iii) 2003 டிசம்பர் 30 ஆம் திகதி பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மற்றும் 2019 மே 13 ஆந் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பவற்றுக்கு ஏற்ப குழாய் அமைப்புகள் அல்லது குழாய் அமைப்புகளின் பகுதியினை ஏற்றுக் கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப பேணல் மற்றும் இரண்டு மாத காலத்திற்கு போதுமான எரிபொருள் களஞ்சிய வசதிகளை வழங்குதல் என்பன சீபிஎஸ்டிஎல் இன் கடமையாகும். எவ்வாறாயினும் குழாய் அமைப்பில் அமைப்பில் உள்ள தடைகள் மற்றும் களஞ்சிய முறைமையின் வினைத்திறன் இன்மை காரணமாக கொள்கலன் ஒன்றில் இருந்து எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக கூட்டுத்தாபனமானது தாமதக் கட்டணம் செலுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. | சிபிபிஎஸ்டிஎல்லால் குறைவான உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்ததனால் 2021 காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட பொருட்களுடன் தொடர்புபட்ட தாமக்கட்டணத்தை கப்பல் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகள் ஏற்கனவே சிபிபிஎஸ்டிஎல் கொலன்னாவைக்கு மீளப்பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. இது பற்றி சிபிபிஎஸ்டிஎலிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை. | கூட்டுத்தாபனம் மற்றும் நாடு முழுவதிற்குமான செலவை குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (iv) 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை எண்ணெய் நிலையம் வரை 12″ விட்டம் மற்றும் 5,500 மீற்றர் நீளமான குழாய் புனரமைப்பு தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 250 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெற்றுக் கொள்வதற்காக CPSTL உடன் ஏதேனும் பேச்சுவார்த்தை நடத்தயோ அல்லது ஏதாவது ஒப்பந்தங்களோ கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. | 03.07.2019 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில், “கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவைக்கு எண்ணெய்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியை முன்னெடுப்பதற்காக குடியேற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல்” என்ற தலைப்பில், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு தீர்மானிக்கப்பட்டது மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி மேற்கூறிய குழாய்களை மாற்றுவதன் 50% கிரயம் மூலம் CPC பெறக்கூடிய நிதி நன்மைகளைக் கருத்தில் கொண்டு, இடமாற்றச் செலவில் மீதி 50% பொது திறைசேரியில் பெறக்கூடிய நிதி நன்மைகளை கருத்தில் கொண்டு, CPC இற்கு உத்தரவிட வேண்டும். CPC இன் பணிப்பாளர் சபை UDA இற்குக் உண்மையான செலவில் 50% செலுத்த முடிவு செய்துள்ளது. | கூட்டுத்தாபனத்தின் செலவை குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (v) ஒப்பந்தத்தின்படி உற்பத்திச் செலவுகளானவை களஞ்சிய முனையச் செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றை உள்ளடகுகின்றது. களஞ்சிய முனையச் | சிபிபிஎஸ்டிஎல்லிற்கு உரித்தான பவுசர் தொடர்பான மொத்த பராமரிப்பு செலவு மற்றும் மேந்தலைக்கிரயம் ரேமினல் | போக்குவரத்துடன் தொடர்புடைய அனைத்து நகல் கிரயங்களையும் இல்லாமல் செய்ய |

செலவானது தனிப்பட்ட செலவு, மேந்தலை செலவு மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் CPSTL இன் சொத்துத் தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டின் போக்குவரத்துக் கட்டணங்களானவை ஒப்புக்கொள்ளப்பட்ட உற்பத்திக் கட்டணங்களில் இருந்து வேறுபட்டது என இது குறிக்கின்றது. எவ்வாறாயினும், சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துடன் தொடர்புடைய செலவுகளானவை உற்பத்திக் கட்டணங்களின் களஞ்சிய முனையச் செலவினை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துக் கட்டணங்களின் மீள் நிதியிடலானது நகல்செய்யப்படக் கூடும் ஆபத்து இருக்கின்றது. கிடைத்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் இற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 2,501.8 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

கட்டணத்தின் கீழ் செயற்திறன் கட்டணத்தினூடாக திருப்பி செலுத்தப்பட்டது. ஆனால், 2021 ஆம் ஆண்டு சிபிபிஎஸ்டிஎல்லிற்கு போக்குவரத்துக கட்டணங்கள் நகல் செய்வதை தடுப்பதற்காக சிபிஎஸ்டிஎலிற்கு உரித்தான பவுசர்களுக்கு கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை.

முகாமையால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(vi) 2003 டிசம்பர் 30 ஆம் திகதி பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம், எல்ஐஓசி மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையில் ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தின் படி, களஞ்சிய முனையச் செலவானது வருடத்துக்கு 12 சதவீதம (12%) என்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் கம்பனியில் கடன் அளிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்க ளின் ஒரு பகுதியை உருவாக்குதல் மற்றும் பணப்பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மேலதிகக் கடன்கள் ” என்பதாகும். எவ்வாறாயினும் இவ் ஒப்பந்தமானது 2008 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்தது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டினால் 2009 ஆம் ஆண்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காக ரூபா 2,183 மில்லியனுக்கு மேற்பட்ட ஒரு வட்டித் தொகை 2009 முதல் 2016 வரையான காலப்பகுதி வரை கூட்டுத்தாபனத்தில் செலுத்தப்பட்டது. அத்தகைய கட்டணமானது முறையான மதிப்பீடு இல்லாமலும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி செலுத்த வேண்டிய உண்மைத் தொகையினை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டுள்ளது என

2009 இல் காலவதியான பொதுப்பயனாளர் வசதி ஒப்பந்தத்தின் பகுப்பாய்வுக்கு பின்னர் மேலதிக வட்டி செலுத்துவதனை தவிர்ப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. 2018 ஆம் ஆண்டில் 2018.01.01 முதல் கடன் வட்டி பகுதிகளை செயற்திறன் கட்டணத்திலிருந்து நீக்குவதற்கும், 2018.05.11 சபைத் தீர்மான இலக்கம் 02/1214 படி ரூபா. 3.43 பில்லியன் நிலுவைத் தொகையை சிபிசி கணக்கு புத்தகத்திலிருந்து பதிவழிப்பு செய்ய சபை னுமதி பெறப்பட்டுள்ளது.

2. மேலும் சிபிசியின் DGM (நிதி) எதிர்கால செயற்திறன் கொடுப்பனவுகளிலிருந்து ரூபா. 2.183 பில்லியன் மேலதி வட்டி கொடுப்பனவை மீளப்பெறுவதற்கான முக்கியத்துவத்தை சிபிஎஸ்டிலிற்கு தெரிவிக்கப்பட்டது.

3. அதனை தொடர்ந்து சிபிஎஸ்டிலிற்கு ரூபா. 637.043 மில்லியன் வட்டிக் கட்டணத்தை தீர்ப்பதற்கு பிரதான கணக்கீட்டு

கூட்டுத்தாபனத்தின் செலவை குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

அவதானிக்கப்பட்டது.

உத்தியோகத்தருக்கு எரிசக்தி அமைச்சின் செயலாளரால் இறுதி உத்தரவு வழங்கப்பட்டது.

4. மேலே காட்டப்பட்ட வழிகாட்டுதலின் படி, சிபிசியின் கணக்கு புத்தகங்களிலிருந்து சிபிசி பதிவழித்த வட்டிக் கொடுப்பனவை நிலைமையை விபரிப்பதற்காக BOD க்கு சபைத்தாள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

5. இறுதியாக மேலுள்ள சபைத்தாள் மற்றும் DGM (நிதி) விளக்கத்தை கருத்தில் கொண்டு சிபிஎஸ்டிஎலின் நிலுவையிலுள்ள கடன்வட்டியை தீர்ப்பதற்காக புதிய பாதீடு ஒதுக்கீடான ரூபா. 637.043 மில்லியன் ஒதுக்குவதற்கு BOD அனுமதி வழங்கியிருந்தது.

(vii) ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப குழாய் அமைப்புக்களை பராமரித்தலும் போதிய அளவிலான களஞ்சிய வசதிகளை வழங்குவதுமே துணை கம்பனியான சிபிஎஸ்ரிஎல் இன் பிரதான வகிபாகம் ஆகும். அதன்படி, நாட்டின் எரிபொருள் வழங்கலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைய வசதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கென கட்டணமாக குறிப்பிடத்தக்க அளவு நிதி சிபிஎஸ்ரிஎல் இற்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் ஆனது அண்ணளவாக ரூபா 1,000 மில்லியனை தேய்மானமாக அறவிட்டிருந்ததோடு கடந்த பத்து வருடங்களுக்கான தொகையானது ரூபா 12,000 மில்லியன் ஆகும். இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியின் போது சிபிஎஸ்ரிஎல் ஆல் இலாப எல்லையாக ரூபா 2,983 மில்லியன் அறவிடப்பட்டதோடு கடந்த 12 வருடங்களாக சிபிசி மற்றும் எல்ஓஎல்சி ஆகியவற்றில் இருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகையானது ரூபா 46,523 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும் சிபிஎஸ்ரிஎல் ஆனது புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும் நடைமுறையிலுள்ள வசதிகளை பேணுவதற்காகவும் உடனடியாக ஏதேனும் சாதகமான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள்தா என்பதைக் உறுதிப்படுத்துவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள் இருக்கவில்லை.

விடயத்துடன் உடன்படுதல்

கூட்டுத்தாபனத்தின் செலவை குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

| | | |
|---|---|---|
| (இ) **இடர் குறைப்பு பரிவர்த்தனைகள்**<br>2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இழப்புக்காப்பு பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் படி, 2021 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அப் பரிவர்த்தனைகளால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது ரூபா 14,028 மில்லியனாகும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொமர்ஷல் வங்கியானது 8,648,300 அமெரிக்க டொலர்களை உரிமை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. | நீதிமன்றத்தில் இன்னும் சிபிசி மற்றும் கொமர்சல் வங்கியின் வழக்கு நிலுவையில் உள்ளது. | விரைவாக விடயத்தை தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (ஈ) **எரிபொருள் இருப்புக்களை விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்**<br>சிபிஎஸ்ரிஎல் க்கு உரித்தான 02 பிரதான முனையங்கள் மற்றும் 11 துணைக்கிடங்குகள் ஊடாக கூட்டுத்தாபனம் மற்றும் எல்ஜஓசி வழங்கிய அறிவுறுத்தல்களின்படி நாடாளவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோருக்கு எரிபொருள் இருப்புக்களை சேமித்து விநியோகிப்பது சிபிஎஸ்ரிஎலின் பிரதான வணிகமாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) சிபிஎஸ்ரிஎலினால் விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோருரிடமிருந்து எரிபொருள் கட்டளைகளை பெறுதல், தொடர்புபட்ட முன் தகமைகள் மற்றும் கடன் எல்லைகள் செவ்வைபார்த்தல், விநியோகஸ்தர்களிடமிருந்து பணம் சேகரித்தல், விலைப்பட்டியல் வழங்கல் போன்ற எரிபொருள் விநியோக செயன்முறையின் நடவடிக்கைகள் கையாளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் (GOSL), கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC)<br>ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தில் (GOSL/CPC/LIOC) அவ் செயற்பாடுகள் சிபிஎஸ்ரிஎலிற்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. சிபிசியினால் அவ் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். | உங்களுடைய அவதானிப்புடன் உடன்படுகின்றோம் | கூட்டுத்தாபனம் தன் கடமைகளை மேற்க்கொள் வேண்டும் |
| (ii) பெற்றோலிய உற்பத்திகளின் போதிய கையிருப்பு இல்லாத காரணத்தால் கூட்டுத்தாபனத்தால் நாளாந்தம் சிபிஎஸ்ரிஎலிற்கு நாடாளவிய ரீதியில் விநியோகஸ்தர்கள் மற்றும் ஏனைய | | |

| | | |
|---|---|---|
| நுகர்வோர்களுக்கு பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிப்பதற்கான முன்னுரிமைப்பட்டியல் வழங்கப்படடிருந்தது. இதன் பிரகாரம், 2022 யூன் 07 முதல் 18 வரையான காலப்பகுதியில் மேற்க்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சையின் படி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன. | | |
| (அ) கூட்டுத்தாபனத்தின் முன்னுரிமைப்பட்டியல் இருந்தபோதிலும், 2,509 தொகுதி பெற்றோலிய உற்பத்திகள் ( ஒரு தொகுதி 6,600 லீற்றர்) விநியோகிக்கப்பட்டிருந்தன மற்றும் முன்னுரிமைப்பட்டியலில் உள்ளக்கப்பட்ட 2,524 தொகுதி பெற்றோலிய உற்பத்திகள் சிபிஎஸ்ரிஎல்லினால் விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தால் நெருக்கடியான சூழ்நிலையில் எவ்வித மேற்பார்வையும் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை | உங்களுடைய அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | பொருத்தமான முறையில் விநியோகம் செய்யப்படுகின்றதா என்பது கூட்டுத்தாபனத்தால் மேற்பார்வை செய்யப்படவேண்டும். |
| (ஆ) யூன் 2022 இல் நடத்தப்பட்ட கணக்காய்வு சோதனையில் கூட்டுத்தாபனத்தால் பதிவுசெய்யப்பட்ட 1,143 விநியோகஸ்தரில் 120 விநியோகஸ்தர்களுக்கு எந்தவொரு லோடும் வழங்கப்பட்டிருக்கவில்லையென்றும் 22 விநியோகஸ்தர்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பெற்றோல் ஒரு லோட் (6600 லீற்றர்) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை 08 விநியோகஸ்தர்களுக்கு தலா 210,000 லீற்றர்களுக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. லங்கா ஓட்டோ டீசல் 73 விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை அதேவேளை 08 விநியோகஸ்தர்களுக்கு தலா ஒரு லோட் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை 17 விநியோகஸ்தர்களுக்கு தலா 200,000 லீற்றர்களுக்கு மேல் LAD வழங்கப்பட்டுள்ளது. மேலும் 66 விநியோகஸ்தர்களுக்கு அக் காலப்பகுதியில் வெள்ளை எண்ணெய் உற்பத்திகள் எதுவும் வழங்கப்படவில்லை அதே நேரத்தில் 06 விநியோகஸ்தர்களுக்கு தலா ஒரு லோட் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அம் மாதத்தில் 15 விநியோகஸ்தர்களுக்கு தலா 350,000 லீற்றர் வெள்ளை எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது போன்ற பிரச்சினையை தடுக்கவும் பொருத்தமான நேரத்தில் சரி செய்யவும் கூட்டுத்தாபனம் துரித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உங்களுடைய அவதானிப்புடன் உடன்படுகின்றோம் | மேற் குறிப்பிட்டவாறு |

**(உ) சுத்திகரிப்பு நிலையத்தின் (சபுகஸ்கந்த) பிரதான பணிநிறுத்தங்கள் மற்றும் பராமரிப்பு**

2021 மார்ச் 15 திகதியிடப்பட்ட சபைத்தீர்மான இலக்கம் 52/1248 படி, 2021 ஆம் ஆண்டிற்கான பிரதான சுத்திகரிப்பு பணி நிறுத்தங்கள் மற்றும் பராமரிப்பு 15 பெப்ரவரி முதல் 2021 மார்ச 21 வரையிலான காலப்பகுதிக்குள் நிறைவுற்றிருந்தது. 35 நாட்கள் பணி நிறுத்தங்கள் காலப்பகுதிற்கான மொத்த மதிப்பிட்ட செலவு ரூபா. 907.30 மில்லியன். சபைத்தீர்மானத்திற்கு மேலதிகமாக சுத்திகரிப்பு முகாமையாளரினுடைய உள்ளக சுற்றுநிருப இலக்கம் RRM/03/2021 படி கொடுப்பனவு மற்றும் ஏனைய நடைமுறைகளுக்கான ஏற்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) மேற்கூறப்பட்ட சுற்றிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்திற்குள் பணி நிறுத்தத்தை முடிக்காவிட்டால் மேலதிக நேரத்தின் 82.5 சதவீதத்தை மட்டுமே பணிநிறுத்த கொடுப்பனவாக செலுத்த முடியும். இருப்பினும் கூட 9 நாட்கள் தாமதமானது, சுற்றிக்கைக்கு மாறாக 100 சதவீத பணிநிறுத்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ரூபா. 42.6 மில்லியன் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | 100 % மேலதிகநேர கொடுப்பனவு செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட மேலுள்ள சபைத்தீர்மானம் மற்றும் பிரதான பணிநிறுத்த வேலைகளை விரைவுபடுத்துவதற்காக சுற்றிக்கை இலக்கம் R/RM/03/2021 பிரதான பணிநிறுத்த படிகளை செலுத்த அங்கீகாரம் அளித்திருந்தது. பிரதான பணிநிறுத்த கொடுப்பனவுகளுக்கு சபை தாள் அங்கீகரிக்கப்படாததால் செப்தெம்பர் 2022 முதல் செலுத்தப்பட்ட கொடுப்பனவு மீளப்பெறப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்கி மேலதிக கட்டணம் செலுத்திய தொகையை முழுமையாக மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) சுற்றறிக்கையின் பிரகாரம், சனிக்கிழமை விடுமுறையாக கருதப்படவேண்டும் மற்றும் பொது மற்றும் கூட்டுத்தாபன விடுமுறைகள், போயா மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் உள்ளிட்ட ஏனைய நாட்கள் பணிநிறுத்தற் காலத்தில் வேலை நாட்களாக கருத்தப்படும். இதன்படி அக் காலகட்டத்தில் அதிகபட்சமாக 05 பதில் விடுமுறை நாடகள் கிடைக்கும். எவ்வாறாயினும் 05 நாட்களுக்கு மேல் பதில் விடுமுறை அடையப்பட்ட நிகழ்வுகள் இருந்தன இதன் விளைவாக ரூபா. 5.693 மில்லியன் மேலதிக கொடுப்பனவாகும். | பிரதான பணி நிறுத்தத்தின்போது வழங்கப்பட்ட அனைத்து பதில் விடுமுறைகளுக்கும் பதில் விடுமுறை வழங்குவதற்கான நடைமுறை வழங்கப்பட்டுள்ளது. | மேற் குறிப்பிட்டவாறு |

| | | |
|---|---|---|
| **(ஊ) வெளிநாட்டு வழங்குனரிடமிருந்தான பெறவேண்டியவைகள்**<br>கணக்காய்வுக்கு கிடைத்த தகவலின்படி 2012 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டு வழங்குனரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த தொகை 4,392,675 அமரிக்க டொலர்களாகும். இத் தொகைக்குள் தாமதமான விநியோகம் மற்றும் குறுகி ஏற்றல் காரணமாக விதிக்கப்பட்ட தண்டத் தொகையாள 1,476,556 அமரிக்க டொலர், வெளியக நட்டம் 178,678 அமரிக்க டொலர்கள், ஏற்றுக்கொள்ள முடியாத தரத்திற்கான தண்டம் 2,630,423 மற்றும் விலை வேறுபாடு காரணமாக ஏற்பட்ட நட்டம் 107,017 அமரிக்க டொலர்களும் உள்ளடங்கும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் கூட இத்தொகைகளை வசூலிக்க அல்லது செலுத்தவேண்டிய தொகைகளுக்கு எதிராக தீர்வு காண கூட்டுத்தாபனம் பயனுறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிபிசி சம்பந்தப்பட்ட வழங்குனருக்கு நிதியை அனுப்புமாறு தெரிவித்தது, ஆனால் இன்னும் தீர்வு காணப்படவில்லை ஏனெனில் சிபிசி அவர்களுக்கு செலுத்தவேண்டிய தாமதக்கட்டணமத்தை கொண்டுள்ளனர் | நிலுவையிலுள்ளவைகளை சேகரிக்க அல்லது செலுத்தவேண்டிய தொகைகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) அமைச்சரவை அமைச்சர்களால் 2012 மார்ச் 22 இல் தீர்மான இலக்கம் 12/0295/510/003/TRB முடிவின் பிரகாரம், நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுடன் பெற்றோலிய உற்பத்திகளை வழங்குவதற்கான கால ஒப்பந்தத்தில் வாராந்த அடிப்படையில் உடனடி கொள்வனவை நிராகரிக்க வரிசை அமைச்சு முயற்சிக்க வேண்டும். எவ்வாறாயினும் மேற்கூறிய தீர்மானத்திற்கு மாறாக உடனடி கொள்வனவு அடிப்படையில் 2021 ஆம் வருடத்தில் 99 ஏற்றுமதிகளில் 28 ஏற்றுமதிகள் மேற்க்கொள்ளப்பட்டன. | 2021 ஆண்டு காலப்பகுதியில் 23 காரணங்களினால் ஒற்றை கேள்விகோரல் அழைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. | அமைச்சரவவை தீர்மானங்களுடன் கூட்டுத்தாபனம் இணங்க வேண்டும் |

**3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்**<br><br>தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய கொள்திறன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்து தற்பொழுது இலங்கையில் செயற்பாட்டில் உள்ள எரிபொருள் போக்குவரத்து குழாய் அமைப்பு முறைமையின் பொருத்தப்பாடு மற்றும் உற்பத்தித்திறன், புகையிரதம் மற்றும் பவுசர் வண்டிகளின் போக்குவரத்து முறைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாட்டிலுள்ள<br>பெற்றோலிய கட்டிடத் தொகுதி மற்றும் | விடயத்துடன் உடன்படுதல். | கூட்டுத்தாபனத்தினால் சரியாக மதிப்பீடு செய்து பரிந்துரை அறிக்கையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் உள்ள பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து முறைமையில் சீரான மற்றும் பாதுகாப்பான செயல்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அவதானிக்கப்பட வேண்டும். |

எரிபொருள் போக்குவரத்து ஆகியவற்றில் சுமூகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்கின்றதுமான விசேட கணக்காய்வு அறிக்கையானது 2020 ஆகஸ்ட் 28 பாராளுமன்றத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. அக் கணக்காய்வில் பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து செயன்முறை சீராகவும் மற்றும் பாதுகாப்பாகவும் செயற்படுத்துவதற்கான முறையான உள்ளகக்கட்டுப்பாடு கூட்டுத்தாபனத்தால் பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) **திருகோணமலை தாங்கிப் பண்ணை**

திருகோணமலை தாங்கிப் பண்ணையில் 100 எண்ணெய்த் தாங்கிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர் (m3)(10,000MT) கொள்ளளவினைக் கொண்டுள்ளன. மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகளானவை 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. 358.553 கெக்டெயர் நிலப் பரப்பானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiralty இன் ஆணையாளர்களுக்கு 999 வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1961 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுத்தாபனமானது மூன்று தவணைகளில் 250,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணகளைச் செலுத்தியது. 1964 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காணி, எண்ணைத் தாங்கி கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்திற்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்த ஒரு சட்டரீதியான ஆவணமும் பெறப்படவில்லை.

2003 ஆம் ஆண்டு 35 வருட காலங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் நிலத்தினை எல்ஐஓசி கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் எல்ஐஓசி கம்பனிக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு சிபிசியின் உத்தியோகத்தர்கள் குழு, தாங்கி மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு மற்றும் குழாய் அமைப்புக்களின் நிபந்தனை மதிப்பீட்டை நடாத்தினார்கள் மற்றும் 2016 இல் வணிக மாதிரியை முன்மொழிந்தார்கள். ஆத் தாங்கிகளில் நிலவும் புவிசார் அரசியல் சிக்கல் காரணமாக சிபிசியின் எந்த தரப்பினராலும் முன்மொழியப்பட்ட அபிவிருத்தியை மேற்கொள்ள
அனுமதிக்கப்படவில்லை.

இந்த பின்னனியில் 2020 ஆம் வருடத்தில் சிபிசி மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டு பயன்பாட்டிற்கான பெற்றோலிய உற்பத்திகளை சேமிப்பதற்காக மேல் தாங்கி பண்ணையிலுள்ள 24 சேமிப்பு தாங்கிகளை புதுப்பிக்க ஓர விரிவான மேம்பாட்டுத்திட்டத்தை தயாரித்து விநியோக மற்றும் சட்பூர்வமான ஏற்பாடுகள் மற்றும் முன் சாத்தியவள ஆய்வை உள்ளகரீதியாக நடத்தியது.

இதற்கிடையில் இத் தாங்கி பண்னை மேம்பாட்டிற்காக எரிசக்தி அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் 2021.12.24 இல் திருகோணமலை பெற்றோலியம் ரேமினல் (தனியார்) லிமிடெட் என்ற சிபிசி யின் துணை நிறுவனம் உருவாக்கப்பட்டது. பண்ணையின் உரிமையை தெளிவுபடுத்தவும் மற்றும் பண்ணையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பெற்றோலியம் தொடர்பான தொழிலை தொடங்கவும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தமானது ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது. கூட்டுத் தாபனமானது எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை அல்லது தாங்கிகளைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலிருந்து எல்ஐஓசி கம்பனியானது இச் சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றது. கைவிடப்பட்ட மேற்பகுதியிலுள்ள 84 தாங்கிகளை நவீனமயாக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தாங்கியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்கான செயற்பாடுகள் இதுவரை மேற்க்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனமும் எல்ஐஓசியும் இணைந்து திருகோணமலை எண்ணெய் ரேமினல் லிமிடெட்டை 2021 டிசம்பர் 24 இல் ஸ்தாபித்த போதிலும் அவ்விலக்கை அடைவதற்கான பொருத்மதமான செயற்பாட்டு திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

(இ) **சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்**

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காணப்பட்டதைப் போன்று தற்போது காணப்படுகின்ற சுத்திகரிப்புச் சாலை 05 தசாப்தங்களுக்கு முன்னர் (1969 இல் ஆரம்பிக்கப்பட்டு) ஒரு அடிப்படையிலான சுத்திகரிப்பு சாலையாக காணப்படுகின்றதுடன் நாட்டில் பெற்றோலியப் பொருட்களுக்கு காணப்படும் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாததாகக் காணப்படுகின்றதுடன், குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களினை வெளியிடுவதற்கு வசதிகள் உள்ளடங்கலாக உயர்தர தொழில்நுட்பங்களுடன் செயற்படுகின்ற மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனை உத்தமப்படுத்துவதன் மூலம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற தரம்குறைந்த பொருட்களினை உயர் பெறுமதியுடைய பொருட்களுக்கு மேம்படுத்துவதற்கான திறன்களினுடைய சுத்திகரிப்புச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இந்த சுத்திகரிப்புச் சாலை குறைந்த இலாபத்துடன் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், கிரய சுத்திகரிப்பு விரிவாக்கம் மற்றும் மாற்றியமைத்தல் திட்டம் பல்வேறு காரணங்களால் கணிசமான காலத்திற்கு (10 வருடங்களுக்கு மேலாக) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் திட்டத்தின் சாத்திய வள ஆய்வை மீள்பரிசீலணை செய்ய வேண்டியிருந்தது. எனவே ஒரு அடிப்படை பூர்வாங்க முன் சாத்தியவள ஆய்வு ஒரு உள்ளக குழுவால் மேற்க்கொள்ளப்பட்டது.
அதன்பின்பு அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்துடன் M/S KBS தொழிநுட்ப லிமிடெட்ட் ஊடாக BOT அடிப்படையில் ஒரு புதிய 100,000 bbl/d சுத்தீகரிப்பு நிலையத்தை நிறுவும் நோக்கத்திற்காக ஒரு சாத்தியவள ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டது.
இத் திட்டத்திற்கு 100 ஏக்கர் காணி தேவை என கண்டறியப்பட்டு காணி தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் கேள்வியை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு இது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்

| | | |
|---|---|---|
| வினைத்திறனான முறையொன்றில் சந்தைக்கு பெற்றோலியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன்மொழியப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (எஸ்ஓஆர்ஈஎம்) சீபிசீ இனால் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது.<br>மேலும் 1003 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது இவ்வறிக்கையினை மேற்கொள்ளும் திகதி வரையிலும் விளைவற்ற நிலையிலேயே உள்ளது. | கையகப்படுத்தும் பணி ஏற்கனவே மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. கேள்வி செயற்பாடு தொடங்குவதற்கு அங்கீகாரம் கோரி அமைச்சரவைப் பத்திரம் ஒன்று வரிசை அமைச்சால் தயாரிக்கப்பட்டது. | |
| (ஈ) 2013 ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் பெற்றோலிய உற்பத்திகளை கொள்வனவு செய்வது தொடர்பாக 251 மில்லியன் அமெரிக்கடொலரகளுக்கு சமமான ரூபா.32,344 மில்லியன் தேசிய ஈரானிய கூட்டுத்தாபனம் தெகரானுக்கு செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ஈரானுக்கு விதிக்கபட்ட கொருளாதார தடையால் இத் தொகையை செலுத்த முடியவில்லை. அம் மீதி நிதிக்கூற்றில் கொடுக்கல்வாங்கல்களின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் பரிமாற்ற விகிதத்தில் செலுத்தவேண்டிய பெறுமதியாக காட்டப்பட்டது, மேலும் சீர்செய்தலின் வித்தியாசம் அந்தந்த வருடத்தின் பரிமாற்ற இலாபம் அல்லது இழப்புக்கு மாற்றப்பட்டது மற்றும் மீளாய்வாண்டிறுதியில் செலுத்தப்படவேண்டிய மீதி மற்றும் ஒன்று திரட்டப்பட்ட பரிமாற்ற இழப்பு (2012 முதல் 2021 வரை) முறையே ரூபா. 50,938 மில்லியன் மற்றும் ரூபா. 18,594 மில்லியன். மீளாய்வாண்டிறுதியில் செலவாணி நட்டம் ரூபா. 3,004 மில்லியன் இருந்நது. மேலும், கட்டுபாடற்ற வெளிப்புறக்காரணிகளால் அதற்கான கொடுப்பனவு எதுவும் செலுத்தப்படபவில்லை என்பது அவதானிக்கப்ட்டது. எவ்வாறாயினும் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வரும் சூழ்நிலையில், அத்தொகையை மாற்றுவழிகள் மூலம் செலுத்துவதற்கும், நிலுவைத்தொகையை தீர்காமல் வைத்திருக்கும் நிதியியல் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் உடனடி முயற்சியை மேற்கொண்டதா என்பதனைக் கண்டறிய போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள் இல்லை. | இத்தொகையை மாற்றுவழியில் தீர்வு செய்ய சிபிசி முயற்சி எடுத்தாலும் அனுமதி சிக்கல் காரணமாக இத் தொகையை தீர்க்க முடியவில்லை. | கூட்டுத்தாபனத்தின் செலவு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விளைவுகளை குறைத்தலிற்கு முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ)** எல்பி கேஸ் செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானமொன்றினை ஸ்தாபித்தல் நோக்கத்திற்கு ரூபா 10.6 மில்லியனுக்கு வனாத்தமுல்லையில் அமைந்துள்ள ஹல்கஹக்கும்புர காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 700 கட்டுமானங்களுக்கு அதிகமாக அது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. | அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சரியானது. | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| **(ஆ)** கிடைக்கக்கூடிய தகவல்களின் பிரகாரம், மஹன காணி ரூபா 0.625 மில்லியன் தொகையொன்றிற்கு கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்திருந்ததுடன், அதற்குள் அது கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 1986 இல் கொள்வனவுக்குப் பின்னர் கூட முன்னைய உரிமையாளரினால் அந்த நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மீதமுள்ள காணிகளுக்கு வெற்றிடமுள்ள உரித்தை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் கடன்கள்** | | |
| (i) கூட்டுத்தாபனத்தால் குறிப்பிடத்தக்க கடன் விபரணங்கள் பராமரிக்கப்பட்டிருந்தாலும், கடன் விபரணங்கள் முகாமைசெய்வது தொடர்பாக பொருத்தமான நிதிவளம் எதுவும் ஸ்தாபிக்கபட்டிருக்கவில்லை. | ஊழியர்களுக்கான கடன்கள் என்பது நீண்ட காலத்திற்கு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஒரு ஊழியர் நன்மையாகும் மற்றும் சிபிசி அக் கடன்களுக்கான நிதிகொள்கையை கொண்டுள்ளது. புதிய கடன் வகையை அறிமுகப்படுத்தும் போது அல்லது கடன் எல்லையை அதிகரிக்கும் போது சபையின் அங்கீகாரம் பெறப்படும். | ஊழியர் கடனுக்கான பொருத்தமான நிதிக் கொள்கையை ஸ்தாபிக்க வேண்டும். |
| (ii) கூட்டுத்தாபனத்தால் கடன்களை வழங்குவதற்கான திறன் மற்றும் வட்டியுடன் கடன்களை மீளப்பெற்றுக்கொள்ளும் திறன் என்பனவற்றின் டீபாதுமான ஆய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப்படடிருக்கவில்லை | உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கும் போது சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் நடைமுறையில் உள்ளன. கணனியில் கடன் பிரதான கோப்பு உள்ளது. வேலையைவிட்டு நீங்கிய | கூட்டுத்தாபனம் கடன் திட்டத்திற்கான பொருத்தமான மீட்பு திட்டம் நிறுவ வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலும் அது தொடர்பான கொள்கை எதுவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பிரதான கடன் கோவை முறையாக பராமரிக்கப்படடிருக்கவில்லை இதன் விளைவாக வேலையைவிட்டு நீங்கிய அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் செலுத்தப்படாத அல்லது மீளப்பெறப்படாத நிலுவைத்தொகை மீதியிலுள்ளன கடன்கள் நிலுவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் உள்ளன. மேலும் கூட்டுத்தாபனத்தினால் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டிறுதியில் ரூபா. 16.67 மில்லியன் செலுத்தப்படாத கடன் நிலுவைகள் இருந்தன. | அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் கடன நிலுவைத் தொகைகள் அவர்கள் அந்தந்த கடன் நிலுவைகளை தீர்க்கும் வரை அல்லது சிபிசி அவ் நிலுவைகளை தள்ளுபடி செய்யும் வரையில் நிலுவை அட்டவணையில் இருக்கும். செலுத்த தவறியவர்களுக்கு கூட்டுத்தாபனம் மீட்பு நடவடிக்கை எடுக்கின்றது மற்றும் சில உத்தியோகத்தர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் பாரியளவிலான கடன் விபரணங்களை பராமரிப்பதனால், போதிய நிதி இல்லாததனால், மிக அவசரமான மற்றும் முக்கியமான மூலதன விருத்தி வேலைகளை தாமதப்படுத்தவோ அல்லது பிற்போடவோ வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறிய சிக்கல்களை தீர்ப்பதற்கு வணிகவங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு கடன் திட்டத்தை வெளியே வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2021 டிசம்பர் 31 இல் ஊழியர் கடன் விபரணம் ரூபா. 4.273 மில்லியன். இது மொத்த சொத்து அடிப்படையில் 1.02 % மட்டுமே. இந்த கடன் விபரணத்தில் நீண்ட காலத்திற்கு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் உள்ளடங்கும் மற்றும் கூட்டுத்தாபனம் கடனை முகாமை செய்வதற்கான செயன்முறையை நிறுவியுள்ளது. | கூட்டுத்தாபனம் உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பின்றி கடன் திட்டத்தை வெளியாருடன் செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) மேலதிக நேரக் கொடுப்பனவு**<br>கூட்டுத்தாபனத்திலுள்ள 2,296 ஊழியர்களில் 998 ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவு அவர்களின் அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதத்தை விஞ்சியது. மேலும், 391 ஊழியர்கள் அல்லது மொத்த ஊழியர்களில் 17 சதவீதம் பேர் தங்கள் அடிப்படை சம்பளத்தில் 100 சதவீதத்தை விஞ்சியுள்ளனர், இதில் 16 பேர் தங்கள் அடிப்படை சம்பளத்தில் 200 சதவீதத்தை விஞ்சியுள்ளனர். | 2021 டிசம்பர் 01 இலிருந்து முகாமைத்துவம் மேலதிக நேரங்களுக்கு எல்லைகளை விதிப்பதன் மூலம் மேலதிக நேரத்தை கட்டுப்படுத்த தீர்மானித்தது. | கூட்டுத்தாபனம் மேலதிக நேரத்தை கட்டுப்படுத்த வேண்டும் மற்றும் மேலதிக நேரங்களுக்கு அங்கீகார எல்லைகளை ஸ்தாபிக்க வேண்டும் |